மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.</u>61/2020

2025ம் ஆண்டு ஆகஸ்ட் 25ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாச்சிமுத்து | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>25.08.2025 வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் 1957 ஆண்டு பிறந்தேன். 01.02.1934 தேதியில் அண்ணாமலை செட்டியார் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் எனது பிரமாணம் வாக்கு மூலத்தில் என்ன விவரங்கள் சொல்லி உள்ளேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாபா சொத்தின் காலையில்

எனக்கு தெரியுமா என்றால் தெரியாது தாவா சொத்தின் செக்குபந்தி எனக்கு தெரியும் தாவாசொத்தின் கிழப்புறப் பகுதியில் தென்வடல் ரோடு உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தின் மேல் புறம் தென்வடல் ரோடு உள்ளது என்றால் ஆமாம். தாவா சொத்தின் தென்புறம் கிழமேல் ரோடு உள்ளது என்றால் ஆமாம்.

2. தாவா சொத்தின் வடபுறம் 1921 கிரய ஆவணத்தின்படி பழனியப்ப பண்டாரம் என்பவருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் இல்லை லட்சுமியம்மாள் பூமி உள்ளது. லட்சுமியம்மாள் பெயரில் ஆன கிரைய ஆவணத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் வடப்புரம் லட்சுமியம்மாள் என்பவர் பூமி உள்ளதாக நான் யார் சொல்லிக் கொடுத்து சொல்கிறேன் என்றால் இல்லை. நான் தாவா சொத்திற்கு அருகில் தான் இருக்கிறேன் அதனால் எனக்கு நேரில் தெரியும். நான் தாவா சொத்திற்கு அருகில் கடை வைத்துள்ளேன். 1982ல் இருந்து லட்சுமியம்மாள் தான் தாவா சொத்தின் வடபுறம் இருந்து வருகிறார். தாவா சொத்து என்றால் என்ன என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் நான் கடை வைத்துள்ளேன் என்பதற்கு பத்திரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை உரிமம் உள்ளது. வாடகை ரசீதுகள் உள்ளதா என்றால் இல்லை.

3. போக்கிய பத்திரம் மற்றும் வாடகை பத்திரம் உள்ளதா என்றால் பத்திரங்கள் இல்லை வாய்மொழியாக தான் பேசிக் கொண்டோம். 2014 பத்திரத்தை நான் பார்த்து உள்ளேனா என்றால் பத்திரத்தை பற்றி எனக்கு தெரியும். 2014 ஆம் ஆண்டு பத்திரத்தில் பட்டா எண் தெரியுமா என்றால் அது நத்தம் பட்டா பட்டா எண் தெரியாது தாவா சொத்தின் மூன்று புறமும் சாலை உள்ள நிலையில் நத்தம் எங்கே உள்ளது

என்றால் நான் இருக்கும் இடமே நத்ததிற்கு சேர்ந்ததுதான். நத்தம் அரசாங்கத்திற்கு பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது நத்தம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நத்தம் பட்டாவை வைத்து தான் அவர்கள் பாகக்கரார் செய்து கொண்டார்கள் பாகக்கரார் ஆவணத்தில் நான் சாட்சியாய் என்றால் சாட்சி கையெழுத்து போடவில்லை அளவீடு செய்த போது கூட இருந்தேன்.

4. பாகப்பிரிவினை ஆவணத்தை எந்த ஆவணத்தை அடிப்படையாக வைத்து எழுதினார்கள் என்றால் நத்தம் பட்டாவை வைத்து பாகக்காரர் ஆவணம் எழுதினார்கள். நத்தம் பட்டாவை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நத்தம் பட்டாவில் எவ்வளவு விஸ்தீரணம் கண்டுள்ளது என்றால் சுமார் 8000 சதுர அடிக்கு மேல் அதில் கண்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பட்டாவில் 8000 சதுர அடிக்கு மேல் என கண்டுள்ளதா என்றால் அதில் கண்டுள்ள அளவீடு எனக்கு தெரியவில்லை ஆனால் பட்டா வாதிகளுடைய பட்டா தான். என்னிடம் காட்டப்படும் பட்டா 01.02.1934 வருடத்திய பத்திரத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாணம் வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் அன்னியர் என்று சொல்லி உள்ளேன் என்றால் பிரதிவாதிகள் யார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய கடைக்கு வடபுறமாக லட்சுமியம்மாள் என்பவர் குடியிருந்து வருகிறார். எவ்வளவு பிரித்துக் கொண்டார்கள் என்றால் ஒவ்வொருவருக்கும் நாலாயிரத்து சிலரை சதுர அடிகள் பிரித்துக் கொண்டார்கள் எவ்வளவு என்று சரியாக தெரியவில்லை.

5. அதை பொறுத்து நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து திருப்பூர் மெயின்

ரோட்டில் அமைந்துள்ளதால் ஒரு செண்ட் 30 லட்சத்திற்கு மேல் விற்கும் என்றால் 25 லட்சத்திற்கு மேல் இருக்கும். தாவா சொத்தில் 1–1/2 செண்ட் நிலத்தை பொறுத்து வாதிகள் பிரதிவாதிகள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து பட்டா வாங்கியுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. 01.02.1934 பத்திரத்தில் கண்டுள்ள விஸ்தீரனத்தை விட அதிக விஸ்தீரணம் கண்டு பிரதிவாதிகள் பூமியில் 1–1/2 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து 2014 ஆம் ஆண்டு வாதிகள் பாகப்பிரிவினை ஆவணம் எழுதிக் கொண்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. நான் 1957 ஆம் ஆண்டு பிறந்துள்ள நிலையில் அதற்கு முன்பே 1934 ஆம் ஆண்டில் இருந்து தாவா சொத்தில் கட்டிடங்கள் மற்றும் காம்பவுண்ட் சுவர் இருந்து வருவது எனக்கு தெரியும் என நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு நினைவு தெரிந்து தாவா சொத்தில் கட்டிடங்கள் உள்ளது. எனது பிரமாண வாக்கு மூலத்தில் 1934 ஆம் ஆண்டில் இருந்து அண்ணாமலை செட்டியார் தாவா சொத்தில் கட்டிடங்கள் கட்டியும், அதில் மதில் சுவர் கட்டியும் அனுபவம் செய்து வந்ததாக நான் சொல்லி உள்ளது பொய் என்றால் ஆமாம்.

7. தாவா சொத்தை குறித்த அதன் அனுபவம் குறித்த எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதிகள் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தாவா சொத்தை பொறுத்து எதுவும் தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நான் தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தில் வாடகைக்கு இருந்திருந்தால் போக்கிய பத்திரமோ, வாடகை பத்திரமோ ஏற்படுத்தி இருப்பேன் என்றும் அல்லது வரி

ரசீதுகள் செலுத்தி இருப்பேன் என்றும் நான் தாவா சொத்தில் வாடகைக்கு இல்லாததால் தான் மேற்படி பத்திரங்களையோ ஆவணங்களையோ ரசீதுகளையோ என்னால் கொடுக்க முடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கு தள்ளுபடியாகதக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2025.08.25 18:22:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்